கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியில் இருக்கின்ற பிரச்சினை கள் தீர்க்கப்பட்டு வருகின்றன—மாவட்டத் தலைநகரிலே இதற்காக ஒரு தனி விங் ஏற்படுத்தக்கூடிய அளவிலும் ஆராயப்பட்டு வரு கிறது. தனி இயக்குநர் அமைக்கப்பட்டதற்குப் பிறகு இந்தப் பிரச்சினைகளில் அதிகமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டியது எது என்பதைப் பார்த்து மேற்கொண்டு கவனம் செலுத்த அரசு முன்வரும்.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, தலைமைச் செயல கத்திலே உள்ள சித்த மருத்துவ மனை நல்ல முறையிலே செயல் பட்டு வருகிறது. திருச்சியிலே உள்ள சித்த மருத்துவ மனையும் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. குறைந்த செலவில் நிறைந்த சிகிச்சை அளிக்கும் இப்படிப்பட்ட சித்த மருத்துவ மனை களை எல்லா மாவட்டங்களிலும் திறக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி இவையெல்லாம் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பரையாக சில குடும்பத்திலிருக்கிறவர்கள் நாட்டு மருந்துகள் தயாரித்து நல்ல முறையிலே சில பிணிகளைப் போக்குகின்ற முறை யிலே இருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் மாவட்ட அடிப்படை யில் ஒரு ஆய்வாளர் நியமித்துத் தகவல்கள் சேகரித்து எல்லாப் பொது மக்களுக்கும் பயன்படச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதற்காகத் தனியாக இயக்குநர் போடப்பட்ட பிறகு ஆராய்ச்சி நிலையம் வைப்பது, உற்பத்தி நிலையம் வைப்பது போன்றவை பற்றிய நிலைமைகளைப் பரிசீலிக்கலாம். அப்படிப்பட்ட நிலைமையில் மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் கூறுவதைப் போன்ற முயற்சிகளையும் மேற்கொள்ள லாம்.

Physically handicapped qualified in typewriting

***154 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—**

(a) whether representations have been received from handicapped people requesting recognition of the examinations passed in typewriting from English Institutions some time in October, 1967; and

(b) if so, the details of the representations?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இங்கி லாந்தில் 'லண்டன் பிட்மன் தேர்வு நிலையம்' நடத்தும் தட்டெ ழுத்துத் தேர்வு குறித்து சில விளக்கம் அளிக்குமாறு உடல் ஊன முற்ற திரு. பி. சங்கரநாராயணன் அவர்கள் அவரது 15–2–1967-ம்

1970 மார்ச் 2]

நாளிட்ட கடிதத்தில் கேட்டிருந்தார். தமிழ் நாடு அரசாங்க தட்டெழுத்துத் தேர்வுகளுக்கு நிகராக அந்நிய நாட்டுத் தேர்வுகளைக் குறிப்பிட்டுள்ள அரசாங்க ஆணையின் அல்லது விதியின் நகலை அனுப்புமாறு அவர் கேட்டிருந்தார். இந்தியாவிற்கு வெளியேயுள்ள தேர்வுக் கழகங்கள் சார்பில் இந்தியாவில் உள்ள முகவர் நிறுவனங்களால் நடத்தப்படும் வணிக இயல் பாடங்கள் எதிலாகிலும் தேர்ச்சி பெறுவது அரசாங்க ஒப்புதலைப் பெறாதென்று அவருக்கு அறிவிக்கப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்ற சகோதர சகோதரிகள் நம்முடைய அனுதாபத்திற்குரியவர்கள். அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிவுடன் கவனிக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். இதற்கு முன்னாலே இதுபற்றி நடவடிக்கைகள் எடுக்கவிட்டாலும் இனிமேலாவது அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிவுடன் அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்ற திரு. பி. சங்கரநாராயணன் என்பவர் எந்தக் கோரிக்கையையும் அனுப்பவில்லை. தகவல்தான் கேட்டிருந்தார். அதாவது இங்கிலாந்தில் இருப்பதைப் போன்று இங்கேயும் இருக்கிறதா அதற்கு ஈடாக இருக்கிறதா என்ற தகவலைத்தான் கேட்டிருந்தார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று கோரிக்கைகள் வைக்கப்பட்டால் அவற்றை அனுதாபத்துடன் கவனித்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. வ. ஜார்ஜ் : உடல் ஊனமுற்றவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். படித்த பிறகும் வேலையில்லாது திண்டாடி வாட்டமுறும் நிலைமையைப் பார்க்கிறோம். அவர்களுக்கெல்லாம் சலுகை அளித்து வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா? மு.ப. 2–30

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றாலும், உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் தனியார் நிறுவனங்களும், அரசாங்க நிறுவனங்களும் ஓரளவு கவனம் செலுத்தித்தான் வருகின்றன. தனியார் துறையில் உள்ள தொழிற்சாலைகளில் உடல் ஊனமுற்றவர்கள் செய்யக்கூடிய பணிகளுக்கேற்றவாறு சில பல இடங்களில் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். அரசாங்க அமைப்புகளிலும் அவர்களுக்கு ஏற்ற வேலைகள் கொடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுத்தான் வருகின்றன.

தனியார் நிறுவனங்களின் கீழ் உயர்நிலைப்பள்ளிகள்

*** 155 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் நடத்தும் ஸ்தாபனங்களின் மூலமாக உயர்நிலைப்பள்ளிகள் திறக்க வேண்டி மனுக்கள் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?